பக்கங்கள் 18+6

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## அம்புலன்ஸ் மோதி இளைஞர் மரணம்!

மோட்டார் சைக்கிள் ஒன்றும் அம்புலன்ஸ் வாகனம் ஒன்றும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

02

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 03 வெள்ளிக்கிழமை 19.07.2024 அதிர்வு 354



## சிறீதரன், மாவையின் பதில் தாமதம்

# இழுபடுகின்றது தமிழரசு வழக்கு

## மேலும் 11 நாள்களுக்குத் தள்ளிவைப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வழக்கில் மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறீதரன் உட்பட 4 எதிராளிகள் இன்று தமது பதில் மனுக்களைத் தாக்கல் செய்வர் என முன்னாயத் தக் கூட்டத்தில் உறுதி அளித்த போதிலும் அதை அவர்களின் சட்டத்தரணிகள் இன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதனால் வழக்கு மேலும் 11 தினங்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

02

# ஜப்பான் பறந்தார் அநுரகுமார

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. ஜப்பானுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

நேற்று அவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இ ருந்து புறப்பட்டுச் சென்றார்.

தேசிய மக்கள் சக்தியின் வெளிவிவகாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜப்பானில் வாழ்கின்ற இலங்கையர்களுடனான சந்திப்பில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.



அதன்படி, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு ஜப்பானில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை ஜப்பானில் உள்ள தொழில்வாண்மையாளர்களையும் அவர் சந்திக்கவுள்ளார்.

அத்துடன், ஜப்பானின் உயர்மட்ட இராஜதந்திரிகள் சிலரையும் அநுரகுமார எம்.பி. சந்திக்கவுள்ளார்.

# தமிழகத்தில் இருந்து இலங்கைக்குப் படகில் வர முயன்ற முல்லைத்தீவு பெண் உட்பட மூவர் கைது!

(எம்.கே. ஷாகுல் ஹமீது)

தமிழகம், இராமேஸ்வரத்தில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குப் படகில் வர முயன்ற முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த பெண் மற்றும் இரண்டு முகவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் துறைமுகக் காவல் நிலைய உதவி ஆய்வாளர் விஜயகுமார் வழக்கம்போல கடற்கரைப் பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார். அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நின்றிருந்த பெண்ணிடம் விசாரணை மேற்கொண்டார். அந்தப் பெண் இலங்கைத் தமிழில் பேசினார்.

இதையடுத்து, அவரைக் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தியதில், அவர் இலங்கை - முல்லைத்தீவு, பாண்டியன் குளத்தைச் சேர்ந்த வன்னியசிங்கம் என்பவரது மனைவி விஜிதா (வயது 45) என்பதும், கடந்த 2013ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து மருத்துவ சிகிச்சைக்காக 6 மாத விசா பெற்று சென்னை வந்ததும் தெரியவந்தது.



புதுச்சேரியில் 24 நாள்கள் தங்கிய விஜிதா, சென்னை வளசரவாக்கம் பகுதியில் உள்ள இலங்கையைச் சேர்ந்த ராஜன் வீட்டில் கடந்த 10 ஆண்டுகளாக டெய்லர் வேலை செய்து வந்தார். கடந்த ஜூன் 30 ஆம் திகதி மதுரைக்கு வந்து, கூடல் நகர் பகுதியில் இலங்கையைச் சேர்ந்த ராஜ் என்பவர் வீட்டில் தங்கியிருந்தார். பின்னர், உறவினர் உதவியுடன் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஜேசு (வயது 35) மற்றும் 17 வயது இளைஞர் ஆகியோரைத் தொடர்பு கொண்டு, இலங்கைக்குப் படகில் அழைத்துச் செல்வதற்கு 50 ஆயிரம் ரூபா தருவதாகக் கூறினார். இதன்படி, இலங்கைக்குப் படகில் செல்வதற்காக இராமேஸ்வரத்துக்கு வந்தமை விசாரணையில் தெரியவந்தது.

இது குறித்து பொலிஸார் வழக்குப் பதிந்து, விஜிதா, முகவர்களாகச் செயற்பட்ட தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஜேசு உள்ளிட்ட மூவரைக் கைது செய்தனர். இதில் தொடர்புடைய அருளானந்தம் (வயது 39) என்பவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

# இரத்தக் காயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

இரத்தக் காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மாத்தறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெரதுவ பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

54 வயதுடைய நபரே நேற்று இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாத்தறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இழுபடுகின்றது...**

இதேசமயம் வழக்கில் இடையீட்டு எதிராளியாகத் தன்னைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று விண்ணப்பித்துள்ள சிறீதரன் தரப்பு ஆதரவாளரான - கிளிநொச்சியைச் சேர்ந்த ஜீவராஜா என்பவர் தமது விண்ணப்பத்தில் விடாப்பிடியாக உறுதியாக நின்றமையால், அது தொடர்பான எழுத்து மூல ஆட்சேபனைகளைப் பிற எதிராளிகள் சமர்ப்பிப்பதற்கு ஒக்டோபர் 15 ஆம் திகதி வரை நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியது.

இந்த இரண்டு விடயங்களிலும் முடிவு எட்டப்பட்ட பின்னரே வழக்கு அடுத்த கட்டத்துக்கு நகரும் என்றும், அதுவரை இழுபறி நிலைமை தொடரும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வழக்குத் தொடர்பாக மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறீதரன், சண்முகம் குகதாசன், சீனித்தம்பி யோகேஸ்வரன் தவிர்ந்த ஏனைய நான்கு எதிராளிகளான சுமந்திரன், குலநாயகம், சத்தியலிங்கம், இரத்தினவடிவேல் ஆகியோர் சார்பிலான பதில் மனுக்கள் இன்று நீதிமன்றத்தில் சட்டத்தரணி சுமந்திரனினாலும் அவர்களின் பிற சட்டத்தரணிகளினாலும் சமர்ப்பிக்கப்பட்டன.

தங்களின் பதில் மனுவின் பிரதிகளைக் கடந்த 11ஆம் திகதி மற்றைய எதிராளிகளின் சட்டத்தரணியான புவிதரனிடம் தாம் நேரில் கையளித்தார் என்ற தகவலை இன்று நீதிமன்றத்தில் சுமந்திரன் தெரியப்படுத்தினார்.

அதன் பின்னர் கடந்த 14ஆம் திகதி வழக்குத் தொடர்பான எதிராளிகளின் கூட்டம் வவுனியாவில் நடைபெற்றது என்றும், எல்லா எதிராளிகளினாலும் ஒரே விதமான பதிலைச் சமர்ப்பிக்க முடியாவிட்டாலும் அவரவர்களின் பதில் மனுக்கள் இன்று 19ஆம் திகதி நீதிமன்றத்தில் அணைக்கப்படும் என்று அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்றும் சுட்டிக்காட்டிய எம்.ஏ. சுமந்திரன், அதற்கு மாறாக இப்போது இங்கு வந்து மேலும் கால அவகாசம் கோருவது காலத்தை இழுத்தடிக்கும் வேலை என்றும் மன்றுக்குத் தெரிவித்தார்.

இதனையடுத்து எதிர்வரும் 30ஆம் திகதி ஏனைய 4 எதிராளிகளும் பதில் தாக்கல் செய்வதற்குக் கால அவகாசம் வழங்கி வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார்.

இந்தப் பதில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, எதிராளியாகச் சேர விண்ணப்பித்துள்ள ஜீவராஜாவின் இடையீட்டு மனுத் தொடர்பான விடயமும் தீர்மானிக்கப்பட்ட பின்னரே, இனி இந்த வழக்கு அடுத்த கட்டமான 'விளக்கத்துக்கு முன்னரான கலந்தாய்வுக்கு' திகதி தீர்மானிக்கும் விடயத்துக்கு முன்நகரும் எனத் தெரிகின்றது.

**அம்புலன்ஸ்...**

காலி – கொழும்பு வீதியில் தருண சேவா மாவத்தை சந்தியில் இன்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காலியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பலப்பிட்டிய வைத்திய சாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வாகனம், எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர் காலி – கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கோரி யாழ்ப்பாணத்தில் இன்று கையெழுத்து வேலைத்திட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

தேர்தல் காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கோரிய கையெழுத்துப் பெறும் வேலைத்திட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மீன ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாக அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பொது மக்களிடம் குறித்த கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

தேர்தல் காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் வழக்கமாக நிறைவேற்றப்படுவது இல்லை. அவ்வாறான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் இயற்றப்பட வேண்டும்.

இவ்வாறு பொய் வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றமையால் பொது மக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள் என்பது தொடர்பாக 17 மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் குறித்த கையெழுத்துப் போராட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.












# கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபவனி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

இதில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் ஊர் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் புலம்பெயர் தேசத்தில் இருந்தும் வருகை தந்த இந்தப் பாடசாலையின் பழைய மாணவர்கள் பலரும் இந்த நடைபவனியில் கலந்துகொண்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது.

இந்த நடைபவனியில் கலந்து கொண்டவர்களுக்குக் கொழும்புத்துறை சனசமூக நிலையத்தினரால் குளிர்பானம் வழங்கி வைக்கப்பட்டது.

இப்பாடசாலையின் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபவனி சிறப்பாக நடைபெற்றுள்ள நிலையில், எதிர்வரும் நாட்களில் தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.












Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
INK DRIP
முரசு
DESIGN WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# ரணிலின் அபத்த முயற்சி

தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்தில் இருந்து ரணில் விக்கிரமசிங்க அவ்வப்போது மேற்கொண்டு வரும் அரசியல் குளறுபடித்தனம் ஒன்றை இப்பத்தியில் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றோம். வாசகர்களுக்கு அது நினைவில் இருக்கலாம்.

அரசியலில் பரபரப்பை ஏற்படுத்துவதற்கும், மக்கள் கவனத்தையும் அவதானத்தையும் சிரத்தையையும் திசை திருப்புவதற்கும் பல்வேறு யோசனைத் திட்டங்களை - அறிவிப்புகளை - வெற்று பலூன்களாக அவர் அவ்வப்போது பறக்க விட்டு வருகின்றார் என்பதைச் சுட்டி வந்திருக்கின்றோம்.

நாட்டின் 75 ஆவது ஆண்டு சுதந்திர தினத்துக்குள் தேசியப் பிரச்சனைக்கு ஒரு தீர்வை காண்பது, 13ஆம் திருத்த நடைமுறையாக்கம் குறித்து சர்வ கட்சி கூடி ஆராய்ந்து தீர்மானம் ஒன்றை எடுத்து நடைமுறைப்படுத்துவது என்று அவர் அவ்வப்போது பறக்க விட்ட பலூன்கள் பலப் பல.

வெறும் அறிவிப்புக்களோடு அவை அடங்கி விடுவதுதான் வழமையான நிலைமை.

விவகாரங்களை இப்படி அறிவித்து, சற்றுக் கயிறு விட்டு பார்ப்பார் அவர். பிரதிபலிப்புகளை பரீட்சித்துக் கொண்டு அடங்கி விடுவார்.

இது அவரது வழமையான அரசியல் நரித்தந்திரசாலித்தனப் போக்கின் ஓர் அங்கம்.

இப்போது 22 ஆவது அரசமைப்பு திருத்தம் என்ற பலூனை திடுதிப்பெனப் பறக்க விட்டார்.

பறக்கத் தொடங்கியதுமே, எதிர்பார்க்கப்பட்ட படி அந்த பலூன் காற்றுப் போய் படுத்து விட்டது.

இனி என்ன? அதை அப்படியே கைவிட்டு விட்டு, அடுத்த பலூனைத் தேடுவார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை இப்படி மாறி மாறி வெற்றுவேட்டு அறிவிப்புகளாக பலூன்களைப் பறக்க விட்டுக் கொண்டு இருக்க வேண்டியவர்தான் அவர். வேறு வழியில்லை அவருக்கு.

அரசமைப்பில் சர்ச்சைக்குரிய 83 (ஆ) பிரிவை மாற்றும் முயற்சி இப்போதைய நிலையில் தேவையற்றது. அர்த்தமற்றது. அபத்தமான எத்தனம்.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கும் 19ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட போது இந்தப் பிரிவு கவனிக்கப்பட்டது. இதனைத் திருத்த முற்பட்டால் அதற்காக சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்பட வேண்டுமென்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் செய்யக்கூடிய ஆபத்து இருப்பதாக அப்போது கருதப்பட்டது. அச்சமயம் 19 ஆவது திருத்தத்தை வெறுமனே நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றி முடிக்கும் எண்ணம் இருந்தமையால், இந்த 83 (ஆ) பிரிவைத் தொடாமல் அப்படியே விட்டு விடுவது என அச்சமயத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அது அப்படியே விட்டுவிடப்பட்டு இருப்பதால் எந்தக் குழப்பமும் இல்லை என்பது நன்கு கருத்தில் எடுக்கப்பட்ட பின்னரே 19ஆம் திருத்தத்தின் போது அந்தப் பிரிவில் கை வைக்கப்படவில்லை.

இப்போது அதைத் தேவையில்லாமல் தூக்கிப்பிடித்து இந்த ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் புது குழப்பம் - புதுக் குசும்பு - பண்ண முயல்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகள் தீவிரம் பெற்று வரும் இந்த சமயத்தில் தேவையற்ற - அபத்தமான - அரசமைப்பு குழப்பம் ஒன்றைக் கிளறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவை தீர்மானத்திற்கு எதிராக அவரின் நீதி அமைச்சரே கிளர்ந்தெழுந்து தடை போட்டு விட்டார்.

கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் இந்த அபத்த முயற்சிக்கு எதிராகக் கருத்து தெரிவிக்கப்பட்டதாக அறிய வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் களேபரங்களுக்கு மத்தியில் இந்த அபத்த முயற்சி இனி முன்நகராது என்பது தெளிவு.

வழமை போல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ்வப்போது பறக்க விடும் பலூன்களில் ஒன்றாக இந்த அறிவிப்பும் அடங்கிவிடும் என்பதுதான் நிலைமை.

# வர்த்தமானியில் வெளியானது 22 ஆவது திருத்தச் சட்டமூலம்

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலம் ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் அரசமைப்பின் ஏற்பாட்டில் காணப்படும் குறைபாட்டைத் திருத்தும் வகையில் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று அரசு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டாம் எனத் தான் நீதி அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஊடகங்களுக்குக் குறிப்பிட்டிருந்த நிலையில் ஜனாதிபதியின் பணிப்புக்கமைய சட்டமூலம் இன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 83 ஆம் உறுப்புரையானது, அதன் (ஆ) எனும் பந்தியில் ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட என்னும் சொற்பதத்துக்குப் பதிலாக ஐந்து ஆண்டுகள் எனும் சொற்பதத்தைச் சேர்க்கும் வகையில் இந்தத் திருத்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கியதாகக் கருதப்படும் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு எதிர்வரும் வாரம் உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கும் அல்லது தேர்தல் பணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலும் இந்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சியினரும், சிவில் அமைப்பினரும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 22 ஆவது திருத்த வரைவை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஜனாதிபதியின் பதவிக் காலத்துடன் தொடர்புடைய ஒரு விடயத்துக்குச் சர்வஜன வாக்கெடுப்பு கோரும்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகள் நெருக்கடிக்குள்ளாகும் என்று எதிர்த்தரப்பினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

22 ஆவது திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் வாரம் முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 14 நாட்களுக்குள் இலங்கைப் பிரஜைகள் எவரும் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்திஉயர்நீதிமன்றத்தில்வழக்குத்தாக்கல் செய்யலாம்.


குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

GUNAAM'S SUPER MARKET

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998




# திருகோணமலை மாதுமை அம்பாள் ஆடிப்பூரத் திருவிழாவுக்கு ஏற்பாடு

(ஹஸ்பர் ஏ.எச்

வரலாற்று சிறப்பு மிக்க திருகோணமலை கோணேஸ்வரப் பெருமானின் தேவியார் மாதுமை அம்பாளின் சந்நிதியில் ஆடிப்பூர பிரமோற்சவம் எதிர்வரும் (29) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடிமாத பூர நட்சத்திரத்தை தீர்த்தோற்சவமாகக்கொண்டு பத்து நாள்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

அபிஷேகம் தினமும் காலை 8 மணி, மாலை 4 மணிக்கு இடம்பெறும். பூசை காலை 10 மணி, மாலை 5 மணிக்கு இடம்பெறும். கொடித்தம்ப பூசை காலை 10.30 மணி, மாலை. 5.45 மணிக்கு இடம்பெறும். வசந்தமண்டப பூசை காலை 11.00 மணி, மாலை 6.15 மணிக்கு இடம்பெறும்.

உள்வீதி மதியம் 12 மணிக்கும், இரவு உள்வீதி, மற்றும் வெளிவீதி 7 மணிக்கும் இடம்பெறும்.

தேர்த்திருவிழா ஓகஸ்ட் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறும்.

தீர்த்தோற்சவம் ஓகஸ்ட் 07 ஆம் திகதி புதன்கிழமை காலை ஆலயத்தில் இருந்து அம்பாள் புறப்பட்டு காலை 7 மணிக்கு பாபநாச தீர்த்தக் கிணற்றில் தீர்த்தம் இடம் பெற்று தீர்த்தோற்சவத்தின் பின் ஆலயத்தில் ஆடிப்பூர ருதுசாந்தி நடைபெறும்.





# திருகோணமலையில் 400 மாணவருக்கு ஜனாதிபதி நிதிய புலமைப் பரிசில் இன்று!

(எஸ்.கீதபொன்கலன்)

ஜனாதிபதி நிதியத்தால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் ஒரு இலட்சம் புலமைப் பரிசில்களில், 400 புலமைப் பரிசில்கள் இன்று (19) திருகோணமலை மாவட்டத்தின் மாணவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

திருகோணமலை வலயத்தின் 200 மாணவர்களுக்கும், கிண்ணியா வலயத்தின் 100 மாணவர்களுக்கும், திருகோணமலை வடக்கு வலயத்தின் 50 மாணவர்களுக்கும், மூதூர் வலயத்தின் 50 மாணவர்களுக்கும் இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்,திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அத்தாவுல்லா ஆகியோர் மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களை வழங்கி வைத்தனர்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதி அனுசரணையில் ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் இந்தப் புலமைப் பரிசிலுக்கு உரிய பணம் இன்று உடனடியாகவே உரிய மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், மாவட்ட அரச அதிபர், மாகாண கல்வி அமைச்சு செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஆளுநரின் செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# சுற்றாடலுக்கும், சுகாதாரத்துக்கும் சவாலாக சாய்ந்தமருது தோணா!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சனத்தொகையை அதிகமாக கொண்ட பெரும் கிராமம் சாய்ந்தமருதாகும். கிழக்கே கடலையும் மேற்கே வயல் நிலத்தையும் தெற்கே மாளிகைக்காடு காரைதீவு பிரதேசத்தையும் வடக்கே கல்முனை மாநகரத்தையும் கொண்ட சாய்ந்தமருதினூடாக ஊடறுத்துச் செல்லும் தோணா மழை காலங்களிலும் வெள்ள காலங்களிலும் ஊர் தாழாமல் மேலதிகமான நீரை முகத்துவாரத்தினூடாக கடலில் கொண்டு சேர்ப்பதில் பெரும் பங்ககு வகிக்கின்றது.

இந்தத் தோணா மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் அவர்களது பொருளாதாரத்தையும் அதிகரிக்கும் ஒரு முதன்மையாக மூலாதாரமாக காணப்பட்டது. நாளடைவில் கரையோராமாக வாழ்ந்த மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக தோணாவை ஆக்கிரமிக்க ஆரம்பித்ததும் ஆறாகவிருந்த தோணாவின் பரப்பு ஓடையாக மாற ஆரம்பித்தது. இத்தோணாவை மேலும் பொது மக்களின் ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாக்கும் வகையில் முன்னாள் உயர்கல்வி பிரதியமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபா தோணவின் இரு புறமும் பாதைகளை அமைத்தார். அதன்பின்னர் தோணாவை ஆக்கிரமிப்பதற்கு முற்றுபுள்ளி வைக்கப்பட்டது.

அழகான நீர் நிறைந்த பார்ப்போர் மனதில் ஆசையை உண்டுபண்ணிய இத்தோணா இன்று நீர்களைகள் வளர்ந்து புல்புண்டுகள் சூழ்ந்து விஷஜந்துக்களும் நுளம்புகளும் தொற்று நோய் கிருமிகளும் வாழும் இடமாக மாறி இருப்பது இப்பிரதேச மக்களுக்கு மிகவும் மன வேதனையை அளிக்கின்றது.

சாய்ந்தமருது பிரதேச மக்கள் மட்டுமல்ல அயல் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் தமது வீட்டுகழிவுகளையும் மிருக கழிவுகளையும் குப்பை கூளங்களையும் கொட்டும் கழிப்பிடமாக இதனை பயன்படுத்துகின்றனர். மழை பெய்யும் காலங்களில் இந்த தோணாவிலிருந்து வீசும் வெறுக்கத்தக்க மணம் இப்பிரதேசத்தையே ஆக்கிரமித்துக் கொள்ளும் . அந்த அளவு சகிக்க முடியாத வாடை அது.

தோணாவின் இருமருங்கிலும் குடியிருக்கும் மக்கள் நாளாந்தம் பல விதமான சுவாச நோய்களுக்கும் தொற்று நோய்களுக்கும் உள்ளாகி வருவதுடன் இரவும் பகலும் நுளம்பு கடியிலும் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

தேர்தல்கள் நெருங்கும் போது மட்டும் தோணவை துப்பரவு செய்வதாகவும் அதனை மிகவும் அழகான சுற்றாடல் பொழுது போக்கும் இடமாக மாற்றுவதாகவும் மேடைகளில் வாக்குறுதி வழங்கி மக்களின் வாக்குகளையும் தோணா அபிவிருத்திக்காக வந்த பணத்தையும் சுருட்டிக் கொண்டு இடம்தெரியாமல் மாறி விடுகின்றனர்.





தோணாவை வைத்து பல வருடங்களாக உழைத்து வரும் ஒரு கூட்டம் அடுத்த தேர்தலை எதிர்பார்த்து காத்திருக்கன்றது. குட்ட குட்ட குனிபவனும் மடையன் குனிய குனிய குட்டுபவனும் மடையன் என்பது போல் இதனை கேட்பதற்கும் பார்ப்பதற்கும் எவரும் இல்லாத நிலையில் தோணாவின் கதை தொடர்கதையாகின்றது.

தோணாவின் அதிகமான இடங்களில் நீர்களைகள் நிலத்துடன் வேரூன்றி மரமாக மாறியுள்ளது. சில இடங்களில் பெரிய புல் வளர்ந்து காடுபோல் காட்சியளிக்கின்றது. இந்தபட புல் பூக்கும் காலத்தில் இப்புல் பூ வெடித்து காற்றில் பறந்து செல்வதால் ஒரு வகை கடிநோய் ஏற்படுகின்றது என்று அயலவர்கள் தெரிவிக்கின்றனர். இந்தத் தோணாவின் பக்கத்தில் பாடசாலைகள், பொது நிறுவனங்கள், மக்களிடம் வாழிடங்கள், ஹோட்டல்கள் அமைந்து காணப்படுகின்றன. இப்புல் பூண்டுகளை பிரதேச மக்கள் சிரமதானம் மூலம் அகற்றுவதற்கு எடுத்த முயற்சியும் கூட கைகூடவில்லை.

சுகாதார திணைக்களத்தை சேர்ந்த பொது சுகாதார பரிசோதகர்களும் , பொலிஸாரும் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்பு பரவும் சாதகமான நிலையில் காணப்படும் வகையில் தமது சூழலையும் வீட்டு சுற்றாடலையும் வைத்திருப்போருக்கு எச்சரிக்கையும் அதனையும் மீறுவோருக்கு தண்டப்பணமும் செலுத்துமாறு உத்தரவு பிறக்கின்றனர்.

ஆனால் பொதுமக்களின் வீடுகளில் காணப்படுவதை விட எத்தனையோ மடங்கு டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இளநீர் குரும்பைகள் , பொலிதீன் பைகள் , பிளாஸ்டிக் போத்தல்கள் , வாளிகள், உடைந்த சிதைந்த பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருள்கள் , சிரட்டைகள் என்று எத்தனை வகையான பொருள்கள் இத்தோணாவில் வீசப்பட்டு காணப்படுகின்றன.

இத்தோணாவில் வளர்ந்து காணப்படும் நீர்க்களையான சல்வீனியா, பிஸ்ரியா மற்றும் ஐக்கோணியா போன்ற தாவரங்களின் இலைகளுக்குள்ளும் நுளம்பு குடம்பிகள் காணப்படுவது பொது சுகாதார பரிசோதகர்களின் கண்களுக்குப் புலப்பட ஏன் மறுக்கின்றது. இப்படியான சூழல் நிலயைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்து இதற்கான தீர்வைப் பெற தயங்குவது ஏன். இப்படியான நிலமையை பேணிப் பாதுகாக்கும் கல்முனை மாநகசபையிடமிருந்து இதற்கான தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும் என பிரதேசவாசிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

தோணாவை பார்ப்பதற்கும் அதன் அருகில் வாழ்பவர்களையும் பேட்டி எடுப்பதற்கும் இதனை நாங்கள் மிக விரைவில் செய்து தருகின்றோம் என்று வாக்குறுதி வழங்குவதற்கும் வரும் அரசியல் வாதிகள் அந்த இடத்தை விட்டு அகன்று சென்றதும் நடப்பது பூச்சியமாகத்தான் உள்ளது.

இந்த தோணாவுக்கு அருகில் வாழும் சித்தி சுபைதா கருத்து தெரிவிக்கையில்,

இந்த தோணாவுக்கு அருகாமையில் எனது சிறு பராயத்தில் இருந்தே வாழ்ந்து வருகின்றேன். இந்த தோணாவில் குளித்து, பொழுது போக்குக்கு மீன் பிடித்து விளையாடினோம். இந்த மாளிகா வீதியில் மரப்பாலம் ஒன்று இருந்தது. வெள்ள காலத்தில் ஆறு பெருக்கெடுத்து ஓடுவது போல் இந்த தோணவில் நீர் ஓடும். இரவு பகல் என்று பாராது நூற்றுக் கணக்கானோர் இதில் மீன் பிடிப்பர். அவர்கள் பிடிக்கும்மீனை எனது பெற்றோர் வாங்கி கறிசமைத்து சாப்பிடுவோம். கிடுகு பின்னுவோர் காய்ந்த ஓலைகளை இத் தோணாவில் சிறிது நேரம் ஊற வைத்து பின்னர் கிடுகு இழைத்து விற்பனை செய்வர். அவ்வாறு பல தேவைகளை இத் தோணா நிவர்த்தித்தது. – என்றார்.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மேசன் தொழிலாளி முஹம்மது நௌசாத் கருத்து தெரிவிக்கையில் ,

இத்தோணவால் நானும் தனது குடும்பத்தவர்களும் சுற்றத்தாரும் பல விதமான சுற்றால் தாக்கங்களுக்கு உள்ளாகி வருகினடறோம்.

இரவு வேளைகளில் வெளியே செல்ல முடியாத அளவுக்கு நீர்ப் பாம்புகளின் தொல்லை அதிகரித்துள்ளது. மழைக் காலங்களில் துர்நாற்றம் வீசுகிறது என்று தெரிவித்தார் .

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இத் தோணா விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி இம்மக்கள் எதிர்நோக்கும் சுற்றாடல் சவாலுக்கு மிக விரைவில் நிரந்தரமான தீர்வொன்றைப் பெற்று தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.





# இளங்கலை பட்டதாரிகள் அமைப்பால் சாய்ந்தமருதில் மரம் நடுகை நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தில் மரம் நடுகை நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், எதிர்கால சந்த தியினருக்கு பசுமையான உலகத்தை வழங்கவும் ஒரு முக்கியமான படியாக அமைந்தது.

இந்த நிகழ்வில் அல்-ஜலால் வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன், பிரதி அதிபர் ரீ.கே.எம்.சிராஜ் , ஆசிரியர் ஆலோசகரும், சாய்ந்தமருது கோட்டத்துக்கான சுற்றாடல் முன்னாடி கோட்ட ஆணையாளருமான எம்.எம். சியாம், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சாய்ந்தமருது இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.








# உயர்தர கணித விஞ்ஞான மாணவர்களின் பௌதீகவியல் பரிசோதனைக் கருத்தரங்கு

(எஸ்.அஷ்ரப்கான்)

அக்கரைப்பற்று கல்வி வலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட உயர்தர, கணித விஞ்ஞான பிரிவு மாணவர்களின் பௌதீகவியல் பரிசோதனை கருத்தரங்கு ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் பாடசாலையின் அதிபர் அஷ் ஷெய்க் யூ.கே. அப்துர் ரஹீம் (நளிமி) தலைமையில் நேற்று முன்தினம் (17) ஆரம்பமாகி மூன்று நாள்கள் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இன்று (19) இறுதி நாள் நிகழ்வில் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஷ் அபூபக்கர் கலந்து கொண்டு பார்வையிட்டார். மாணவர்களின் விளக்கங்களை செவிமடுத்து மாணவர்களுக்குப் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இங்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ரமீஷ் அப்துல்லா பாடசாலையின் அதிபர் யு.கே. அப்துர் ரஹீம் மற்றும் பிரதி அதிபர் எம். ஏ. கமருன் நிஷா, உதவி அதிபர்களான ஐ.அஹமட் ஜுமான், ஜே.வஹாப்தீன் உட்பட பாடசாலையின் கணித, விஞ்ஞானப் பிரிவு ஆசிரியர்களான எம்.ஏ.சி.எம். இஹ்சாஸ், எம்.எஸ்.உஸ ாமா, எம்.ஐ.முஸ்பிரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.




# இன்று காரைதீவில் நடைபெற்ற விபுலானந்தரின் சமாதி தின நிகழ்வு

( வி.ரி. சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 77 ஆவது மகாசமாதி தின நிகழ்வும், அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா தின பதாதை திரை நீக்க திறப்பு விழாவும் இன்று வெள் ளிக்கிழமை (19) அவர் அவதரித்த காரை தீவில் நடைபெற்றன.

காரைதீவு விபுலாநந்தர் ஞாபகார்த்த ப் பணி மன்றத்தினர் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

முன்னதாக காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியிலிருந்து சுவாமிகளின் திருவுருவச் சிலை தாங்கிய மாணவர் களின் ஊர்வலம் கண்ணகை அம்மன் ஆலயம்வரை நடைபெற்றது.

கண்ணகை அம்மன் ஆலய முச் சந்தியில் அடிகளாரின் திருவுருவச்சி லைக்கு மலர் மாலை அணிவித்து பின்னர் துறவற நூற்றாண்டு விழா தின பதாதை திரை நீக்க திறப்பு விழா வும் இடம் பெற்றது.

பிரதம அதிதியான அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜன், சிறப்பு அதிதியான காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்ரன் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டு சுபவேளை யில் அந்தப் பதாதையை திறந்து வைத்தனர்.

சுவாமிகளின் "வெள்ளை நிற மல்லிகையோ.. " என்ற பாடல் இசைக்க ,அதிதிகளால் சுவாமிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப் பட்டது.

இது சுவாமி பிறந்த காரைதீவு மண்ணில் நிறுவப்படும் துறவற நூ ற்றாண்டு விழா முதலாவது பதாதை யாகும். இந்து சமய கலாசார அலுவல் கள் திணைக்கள பணிப்பாளர் ய.அநி ருத்தனனின் வழிகாட்டலில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வின் ஞாபகார்த்தமாக யாழ்ப் பாணம் இணுவில் முருக ஜீவ அறக் கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் பதாதை திறந்து வைக்கப்பட்டது. 100 வெள்ளை மல்லிகை செடிகள் அதிதிகளால் நடப்பட்டன.

ஒட்டுமொத்த நிகழ்வையும் ஏற்பாடு செய்த பணிமன்றச் செயலாளர் கு.ஜெய ராஜி நன்றி தெரிவித்து உரையாற்றினார். கலாச்சார உத்தியோகத்தர் என்.பிரதாப் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி னார்.







# முல்லைத்தீவில் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவிற்கேற்ப ஜனா திபதி நிதியத்தால் நடைமுறைப்படுத் தப்படும் பாடசாலை மாணவர்களுக்கான புலைமைப் பரிசில் வழங்கும் நிகழ்வானது நேற்று (18) முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி மண்டபத் தில் இடம்பெற் றது.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பங்கேற்புடன் இடம்பெற்ற குறித்த தேசிய ரீதியி லான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் முல் லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 922 மாணவர்களுக்கான புலைமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.



# ‘ஓய்ந்த பின்பும் ஓயாத அழைப்புக்கள்’ சிறுகதை தொகுப்பு வெளியீட்டு விழா!

(அபு அலா )

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்ற றொசில்டா அன்டனின் “ஓய்ந்த பின்பும் ஓயாத அழைப்புக்கள்” சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (21) காலை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

எண்ணம் போல் வாழ்க்கை அமைப் பின் தலைவர் கனக. தீபகாந்தன் தலை மையில் இடம்பெறவுள்ள இந்த சிறு கதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா வுக்கு கிழக்கு மாகாண மீன்பிடித் துறை மாகாணப் பணிப்பாளர் சி.சுதா கரன் (கவிஞர் நிலையூர் சுதர்) பிரதம விருந்தி னராவும், கிழக்கு மாகாண இலங்கை வங்கி சந்தைப்படுத்தல் முகாமையாளர் ந.து.ரகுராம் மற்றும் சட்டத்தரணி திரு மதி புனிதவதி துஷ்யந் தன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள் ளவுள்ளனர். இந்நூலின் முதல் பிர தியை சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஓய்வுபெற்ற அதிபருமாகிய திருமலை நவமும் சிறப்புப்பிரதியை வைத்தியர்க. ஜெயகாந்தராஜாவும்பெற்றுக்கொள்வர்.



# சட்டவிரோத மதுபானங்களுடன் பெண் ஒருவர் நேற்று கைதானார்



திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேனையூர் ஆறாம் வட்டாரத்தில் நேற்று சட்டவிரோத மது பானங்களுடன் பெண் ஒருவரை கைது செய்துள்ளனர் என்று சம்பூர் பொலி ஸார் தெரிவித்தனர்.

அந்தப் பெண்ணிடம் இருந்து பியர் 6 டின்களும் சாராயம் இரண்டு போத்தல்களும் கசிப்பு ஒரு போத்தலும் மீட்கப்பட்டன என்று சம்பூர் பொலி ஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் சேனையூர் ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த 42 வயது பெண் எனவும் சம்பூர் பொலி ஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டது, அனுமதி இல்லாத மதுபான விற்பனையில் ஈடுபட்டது போன்ற இரு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் நீண்ட காலமாக அப்பிரதேசத்தில் இவ்வா றான சட்ட விரோத செயற்பாடுகளுடன் பேணி வந்துள்ளார் என்றும் கிடைத்த தொடர்ச்சியான தகவலின் அடிப் படையில் இவர் கைது செய்யப்பட்டார் எனவும் சம்பூர் பொலிஸார் தெரிவித் தனர்.



# ஆற்றல் விருத்தி செயல் திட்ட நிகழ்வு

(எம். எப்.நவாஸ்)

நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவால் யு.எஸ்.எயிட் மற்றும் குளோபல் கம்யூனிட்டீஸ் அனுச ரணையில் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட தமிழ் மொழி மூல தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர்களுக்கான ஆற்றல் விருத்தி செயற்றிட்டம் அண்மையில் பொலன்னறுவை சுது அறளிய ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் திருமதி எஸ்.பி சாணிக்கா விஜேசூரிய மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான நிறுவகத்தின் உதவிப் பணிப்பாளர்களான திருமதி சந்துணிக்கா மற்றும் திரு சுசந்த குமார மற்றும் யு.எஸ். எயிட் நிறுவனத்தின் திட்ட அமுல்படுத்துனர்கள், திட்டத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் நுவான் சுபசின்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையின் நிலையான நல்லிணக்கத்தை கொண்டுவருவது தொடர்பாக தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகஸ்தர்களின் வகிபாகம் தொடர்பாகவும் எதிர்கால செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது விளக்க மளிக்கப்பட்டது.



# இந்தியத் தூதரைச் சந்தித்த ஜீவன்!

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

இலங்கைக்கான இந்திய தூதர் சந்தோஷ் ஜாவை, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஜீவன் தொண்டமான் சந்தித்துக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

கொழும்பில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் இன்று (19) இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இதன்போது இந்திய வீடமைப்புத் திட்டம், நீர் கட்டணத் திருத்தம், சமகால அரசியல், கல்வி மற்றும் மலையக அபிவிருத்தி சார் விடயங்கள் தொடர்பாக இருவருக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்றன.

# இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறைக் கிளைக்கு அமைப்பாளர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளராக மையோன் றிஸ்லி முஸ்தபா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொண்ட முன்னாள் உயர்கல்வி பீரதியமைச்சர் மர்ஹூம் மையோன் முஸ்தபாவின் புதல்வரான றிஸ்லி முஸ்தபா தனது நியமனக் கடிதத்தை கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீனிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

இதன் போது கொழும்பு "டிரெக் லைன்" நிறுவனத்தின் தலைவர் கல்முனை ஜிப்ரி ஹாஜியாரும் கலந்து கொண்டார்.









# சட்ட விழிப்புணர்வுக் கலந்துரையாடலும் நடமாடும் சேவையும் தெல்லிப்பழையில்

(த.சுபேசன்)

சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலையமானது தெல்லிப்பளை பிரதேச செயலகத்துடன் இணைந்து நேற்று (18) வியாழக்கிழமை இலவச சட்ட விழிப்புணர்வுக் கலந்துரையாடலையும் நடமாடும் சேவையையும் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் முன்னெடுத்திருந்தது.



யு.எஸ். எயிட் மற்றும் ஸ்கோர் திட்ட அனுசரணையோடு இடம்பெற்ற இலவச சட்ட ஆலோசனை மற்றும் நடமாடும் சேவை நிகழ்வுகளில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகள், தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கான பதிவுகள், பொலிஸ் அறிக்கை பெறுதல் மற்றும் புகைப்படம் எடுத்தல் போன்ற சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

நிகழ்வில் விசேட அம்சமாக சட்டத்தரணி திருமதி ரஜந்தி இளங்குமரன் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பாக விழிப்புணர்வை வழங்கினார்.

மது பாவனை, இள வயதுத் திருமணம், குடும்ப வன்முறை, பாடசாலை இடைவிலகல் மற்றும் காணி தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டினார்.

தெல்லிப்பளை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி கோ. சங்கீதா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் திட்ட இணைப்பாளர்களான றொகான் மற்றும் றெக்ஸ், ஆட்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர், தெல்லிப்பளை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், கிராம நிர்வாக அலுவலர், சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலைய உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர், சமாதான நீதிவான் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பொது மக்களுக்கான சேவையை வழங்கியிருந்தனர்.







# இலங்கை அரசைக் கண்டித்து ராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம்!

## உடல் நிலை பாதிக்கப்பட்டு இலங்கை சிறையில் உள்ள மீனவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கக் கோரிக்கை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட்)

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும், கச்சத்தீவு பகுதியில் மீன் பிடிக்க அனுமதி பெற்று தர நடவடிக்கை எடுக்க கோரியும் 5 மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் ராமேஸ்வரம் பஸ் நிலையம் எதிரே இன்று வெள்ளிக்கிழமை (19) காலை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மீன்பிடி தடைக்காலம் முடிந்து மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்ற நிலையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழகத்தை சேர்ந்த 74 மீனவர்களையும் 8 விசை படகுகளையும் 4 நாட்டுப் படகுகளையும் உடனடியாக விடுதலை செய்ய மத்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் தர கோரியும், முன்னதாக இலங்கை சிறையில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 06 மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு தற்போது வரை இலங்கை கடற்படை வசம் உள்ள தமிழகத்தை சேர்ந்த 170 இற்கும் மேற்பட்ட விசைப்படகு மற்றும் நாட்டு படகுகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்ற கோரியும் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

கச்சத்தீவு பகுதியில் இந்திய இலங்கை மீனவர்கள் பிரச்சினை இன்றி மீன் பிடிக்க வழிவகை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் இதன்போது முன்வைக்கப்பட்டது.

வலியுறுத்தி ராமநாதபுரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை, நாகை, தஞ்சை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கன்னியாகுமரி, நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

ராமேஸ்வரத்தில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டம் முதல் கட்டம் எனவும், தொடர்ந்து இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டால் தமிழகம் தழுவிய போராட்டங்கள் நடத்தப்படும் என்றும், இலங்கை சிறையில் நோய் வாய்ப்பட்டு இருக்கக்கூடிய ராமேஸ்வரம் மீனவர்கள் 3 பேருக்கு உரிய சிகிச்சை அளித்து விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.



# கர்நாடகாவில் 55 இடங்களில் இன்று லோக் ஆயுக்தா அதிகாரிகள் சோதனை




பெங்களூரு,ஜூலை19

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த புகாரில் கர்நாடகாவில் 55 இடங்களில் லோக் ஆயுக்தா அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

கர்நாடக மாநிலத்தில் பணியாற்றி வரும் அரசு அதிகாரிகள் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்து வைத்திருக்கின்றனர் என்ச் எழுந்த புகாரின் பேரில் லோக் ஆயுக்தா அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் ஊழல் செய்து சொத்து சேர்த்த அதிகாரிகள் யார்? யார்? என கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்த லோக் ஆயுக்தா அமைப்பு, அவர்களின் வீடுகள், அவர்களது அலுவலகங்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் வீடுகளில் சோதனை நடத்த வாரண்ட் பெற்று நடவடிக்கையை தொடங்கியுள்ளது.

அதன்படி, பெங்களூரு, பெங்களூரு ஊரகம், சிமோகா, யாதகிரி, தும்கூர், ஆகிய இடங்களில் இந்த சோதனை நடந்து வருகிறது. ஒரே சமயத்தில் 55 இடங்களில் இந்த சோதனை நடந்து வருகிறது.

சுமார் நூறுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் இந்த சோதனையை இன்று அதிகாலை முதல் தொடங்கி நடத்தி வருகின்றனர்.




# டெல்லியில் இருந்து அமெரிக்கா புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் ரஷ்யாவில் இறக்கம்

மாஸ்கோ,ஜூலை19


டெல்லியில் இருந்து அமெரிக்கா புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் ரஷ்யாவில் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தலைநகர் டெல்லியில் இருந்து அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகருக்கு நேற்று ஏர் இந்தியா விமானம் புறப்பட்டது. அந்த விமானத்தில் 225 பயணிகள், 19 விமான ஊழியர்கள் என மொத்தம் 244 பேர் பயணித்தனர். விமானம் புறப்பட்டு சில மணிநேரங்களில் ரஷிய வான்பறப்பில் பறந்துகொண்டிருந்தது.

அப்போது, எதிர்பாராத விதமாக விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதையறிந்த, விமானி உடனடியாக ரஷ்ய விமானக் கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவித்தார். இதையடுத்து, ரஷ்யாவின் ரஷ்னொயர்ஸ் நகரில் உள்ள விமான நிலையத்தில் ஏர் இந்தியா விமானம் அவசர அவசரமாக தரையிறக்கபட்டது.

இதையடுத்து, மாற்று விமானம் மூலம் பயணிகள் அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று ஏர் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

# காற்றழுத்த தாழ்வு மண்டலம் வங்கக் கடலில் வலுவாகிறது



சென்னை,ஜூலை19

வங்கக் கடலில் நிலவி வந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றது. தொடர்ந்து வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 12 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தற்போது வடமேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் ஒடிசா மற்றும் அதனை ஒட்டிய வடக்கு ஆந்திர கடலோர பகுதிகளில் அது நிலவி வருகிறது.

மேலும் தமிழ்நாட்டில் அடுத்த 7 நாள்கள் மழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.





# வங்காளதேசத்தில் மாணவர்கள் போராட்டத்தில் 17 பேர் மரணம்; பெரும் அளவு சொத்துகள் நாசம்

டாக்கா,ஜூலை19

வங்காளதேசத்தில் மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இதில் 17 பேர் உயிரிழந்தனர்.பெருமளவு பொதுச் சொத்துகள் நாசமாகின.

வங்காளதேசத்தில் சுதந்திர போராட்ட தியாகிகளின் குடும்பத்தினருக்கு அரசு வேலைவாய்ப்புகளில் 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. ஆனால், இந்த இடஒதுக்கீட்டில் முறைகேடு நடைபெறுவதாகவும், இதை ரத்து செய்யவேண்டும் எனவும் டாக்கா ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு 30 சதவீத இடஒதுக்கிட்டை ரத்து செய்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் மேன்முறையீடு செய்யப்பட்டது. அப்போது, இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு 30 சதவீத இடஒதுக்கீடு செல்லும் என்ற கூறி ஐகோர்ட்டு தீர்ப்பை ரத்து செய்தது.

இதையடுத்து சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை எதிர்த்து அந்நாட்டில் பல்வேறு பகுதிகளில் கல்லூரி, பல்கலைக்கழக மாணவ - மாணவிகள் போராட்டத்தில் குதித்தனர்.

போராட்டத்தில் ஈடுபடும் மாணவ-மாணவிகளுக்கு எதிர்க்கட்சிகளும் ஆதரவு தெரிவித்து வருகின்றன. அதேவேளை, போராட்டக்காரர்களை அந்நாட்டு அரசு அடக்கி வருகிறது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் பொலிஸார் விரட்டியடித்து வருகின்றனர். இதனால் போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இந்த போராட்டத்தில் நடந்த வன்முறையில் ஏற்கனவே 6 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் வெடித்த வன் முறையில் உயிரிழந்தோர் எண் ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளது. போராட்டம் மேலும் தீவிரமடைந்து வரும் நிலையில் வங்காளதேசம் செல்வதை தவிர்க்குமாறு பல்வேறு நாடுகள் தங்கள் நாட்டு குடிமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளன.






# சிலியில் பயங்கர நிலநடுக்கம்

சாண்டியாகோ,ஜூலை19

சிலி நாட்டில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு சிலி. இந்நாட்டின் கடற் கரை நகரான அண்டோபகஸ்டாவில் இன்று பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நகரில் இருந்து 250 கிலோ மீட்டர் தொலைவில் 126 கிலோமீட்டர் ஆழத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிக்டர் அளவில் 7.3 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்தன. இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்பு சம்பவங்கள் ஏற்பட்டனவா என்பது குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

முன்னதாக, சிலியில் கடந்த 2010ம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் 526 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

பக்கங்கள் - 6

வெள்ளிக்கிழமை 19/07/2024

## அல்பேர்ட்டா விபத்தில் ஒருவர் பலி; 8 பேர் காயம்

**அல்பேர்ட்டா, ஜூலை 19**

அல்பேர்ட்டா மாகாணத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், எண்மர் காயமடைந்துள்ளனர்.

C2▶



# கனடாவுக்கு படிக்க வந்தால் முடித்துவிட்டு உங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்லுங்கள்!

## புலம்பெயர்தல் துறை அமைச்சரின் ஆலோசனை இது



**கனடாவுக்கு படிக்க வந்தால், படித்துமுடித்துவிட்டு உங்கள் நாட்டுக்குத் திரும்பிப் போங்கள் என்று கூறியுள்ளார் கனடாவின் புலம்பெயர்தல் துறை அமைச்சர்.**

**கனடாவில் நிலவும் வீடுகள் தட்டுப்பாடு முதலான சில பிரச்சினைகள், கனடா பிரதமரின் அரசியல் வாழ்க்கைக்கு பெரும் சவாலாக மாறியுள்ளன.**

C2▶



# வாகன அபகரிப்புச் சம்பவங்களின் எண்ணிக்கை கனடாவில் வீழ்ச்சி!

## விழிப்புணர்வு, கூட்டு முயற்சி காரணமாக

**ஒன்ராரியோ, ஜூலை 19**

கனடாவில் வாகன அபகரிப்புச் சம்பவங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் வாகன கொள்ளை சம்பவங்களின் எண்ணிக்கை 17 வீதத்தினால் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் இவ்வாறு வாகன கொள்ளைச் சம்பவங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

காப்புறுதி மோசடி தவிர்ப்பு பிரிவினர் இது தொடர்பிலான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

C2▶





# குடிவரவு அமைச்சரின் அலுவலகம் மொன்ரியலில் சேதப்படுத்தப்பட்டது

**கியூபெக், ஜூலை 19**

மொன்ரியலில் அமைந்துள்ள குடிவரவு அமைச்சரின் அலுவலகம் நேற்று சேதப்படுத்தப்பட்டுள்ளது.

குடிவரவு அமைச்சர் மாரக் மில்லர், வில்-மேரி-ல-சட்-ஔ-இல்-தே-சுவா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராவார்.

இவரது அலுவலகம் சேதப்படுத்தப்பட்டது குறித்து மொன்ரியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இது ஒரு குற்றவியல் செயல் என குறிப்பிட்ட அமைச்சர், இதனை வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவித்துள்ளார்.

இதனால் தனது அலுவலக ஊழியர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என அமைச்சர் மில்லர் கூறியுள்ளார்.



இந்த சம்பவம் இஸ்ரேல் – ஹமாஸ் மோதலுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என நம்புவதற்குஜ் காரணம் உள்ளதாக மொன்ரியல் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த வாரங்களில் இஸ்ரேல்–ஹமாஸ் மோதலுடன் தொடர்புடைய பல ஆர்ப்பாட்டங்கள் குடிவரவு அமைச்சர் அலுவலக பகுதியில் நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

மார்க் மில்லர் கடந்த கோடை காலம் முதல் குடிவரவு அமைச்சராகவும் 2015 முதல் வில்-மேரி-ல-சட்-ஔ-இல்-தே-சுவா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார்.

## கனடாவுக்கு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, கனடாவுக்கு கல்வி கற்க வரும் சர்வதேச மாணவர்களுக்கு வழங்கப்படும் விசா எண்ணிக்கையை கணிசமாக குறைத்துள்ளது அந்நாடு.

இந்நிலையில், சர்வதேச மாணவர்கள் தொடர்பில் மேலும் ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவர கனடா அரசு முயற்சி செய்து வருகிறது.

அதாவது, கனடாவுக்கு கல்வி கற்க வரும் சர்வதேச மாணவர்களில் யார் கனடாவில் தொடர்ந்து தங்கியிருக்கலாம், யார் வெளியேறவேண்டும் என்பது குறித்து முடிவு செய்ய அதிகாரிகள் திட்டமிட்டுவருகிறார்கள்.

அது குறித்து பேசிய கனடா புலம்பெயர்தல் துறை அமைச்சரான மார்க் மில்லர், கனடாவுக்கு படிக்க வருபவர்கள், படித்துமுடித்துவிட்டு தங்கள் நாட்டுக்குத் திரும்பிப் போகவேண்டும், ஆனால், இப்போதைய நிலைமை அப்படி இல்லை என்று கூறியுள்ளார்.

## வாகன அபகரிப்பு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லைப் பாதுகாப்பு ரோந்து பணிகள் அதிகரிக்கப்பட்டமை, பொலிஸாரின் விசாரணைகள், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு போன்ற காரணிகளினால் இவ்வாறு வாகன கொள்ளைச் சம்பவங்கள் குறைவடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்ராரியோ மற்றும் கியூபெக் மாகாணங்களில் பொலிஸார் வாகன கொள்ளை தடுப்பு தொடர்பிலான விசேட பொலிஸ் படையணிகளை நிறுவி நடவடிக்கை எடுத்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டு முயற்சியின் மூலம் வாகன கொள்ளை சம்பவங்கள் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

## அல்பேர்ட்டா...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்பேர்ட்டாவின் தென்பகுதியில் பஸ் ஒன்றும் எஸ்யுவி இரக வாகனம் ஒன்றும் மோதியதால் இடம்பெற்ற இந்த விபத்தில் பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேரந்த 44 வயதான பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் 27 பேர் பயணித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் 6 பேர் சிறு காயங்களுடன் சம்பவ இடத்தில் சிகிச்சை பெற்றனர் எனவும், மேலும் இருவர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




# ரொறன்ரோ நகர வடிவமைப்பில் பாரிய குறைபாடு அதனால்தான் மழை வெள்ள நெருக்கடி தீவிரமாம்



கனடாவின் ரொறன்ரோ நகரின் பாரிய நகர வடிவமைப்பில் பாரிய குறைபாடு காணப்படுவதாக நகர முகாமையாளர் தெரிவிக்கின்றார்.

குறிப்பாக கடும் மழை ஏற்படும் போது வந்து சேரும் வெள்ளத் தைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையில் நகரம் வடிவமைக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கனடாவின் ரொறன்ரோ நகரில் பாரிய மழை வெள்ளம் ஏற்பட்டது.

அதிவேக நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்கள் நீரில் மூழ்கியமையுடன் வீடுகளும் நீரில் மூழ்கி இருந்தன.

மேலும் மின்சாரமும் துண்டிக்கப்பட்டு இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பாரிய அளவில் நீர் நிறையும் போது போது அதனை கட்டுப்படுத்தக் கூடிய வகையில் இந்த நகரம் வடிவமைக் கப்படவில்லை என நகரின் முகாமை யாளர் போல் ஜான்சன் தெரிவித் துள்ளார்.

எனவே வெள்ளத்தை கட்டுப்படுத் தக் கூடிய நடவடிக்கைகள் எடுப்பதில் சவால்களை எதிர்நோக்க நேரிடுவதாகத் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# கனடாவின் தலைமை இராணுவ தளபதியாக பதவியேற்ற முதல் பெண் ஜெனரல் ஜென்னி

**ஒன்ராரியோ, ஜூலை 19**

கனடாவின் பாதுகாப்புப் படைத் தலைவராக முதல் தடவையாக பெண் ஒருவர் பதவி ஏற்றுள்ளார்.

கனடிய ஆயுதப்படைக்குத் தலைமை தாங்கும் முதல் பெண்மணி என்ற பெருமையை ஜெனரல் ஜென்னி கரிக்னன் பெற்றுள்ளார்.

கனடிய யுத்த அருங்காட்சியகத்தில் அவரது பதவி ஏற்பு நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

கனடாவின் ஆளுநர் நாயகம் மேரி சிமோன் இந்த பதவி ஏற்பு நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

இராணுவப் பொறியியலாளராகப் பயிற்றுவிக்கப்பட்ட இவர், கனடிய இராணுவத்தில் 35 வருடங்கள் பணி அனுபவம் கொண்டவராவார்.

ஆப்கானிஸ்தான், பொஸ்னியா–ஹேர்ஸ்கொவினா, ஈராக், சிரியா ஆகிய இடங்களில் அவர் கனடிய இராணுவத்தின் கட்டளைத் தளபதியாக பணியாற்றியுள்ளார்.

2021 முதல் தலைமை இராணுவ தளபதியாக பணியாற்றிய ஜெனரல் வெய்ன் ஐர் அண்மையில் தமது பதவியில் இருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

# தொழிலாளர் அமைச்சர் சீமஸ் ஓ’ரெகன் பதவி விலகும் தீர்மானத்தை அறிவித்தார்



**ஒன்ராரியோ, ஜூலை 19**

ஜஸ்டின் ட்ரூடோவின் அமைச்சரவையில் இருந்து உயர்மட்ட அமைச்சர் ஒருவர் பதவி விலகுகிறார் என அறிவித்துள்ளார்.

அரசியலில் இருந்து விலகவுள்ளார்எனதொழிலாளர்அமைச்சர் சீமஸ் ஓ’ரெகன் நேற்றைய தினம் அறிக்கை ஒன்றின் ஊடாகத் தெரிவித்துள்ளார்.

அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என ஓ’ரெகன் அறிவித்துள்ளார்.

ஆனால் அடுத்த பொதுத் தேர்தல் வரை தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராக தொடரவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கனடா தினத்தன்று அரசியலில் இருந்து விலகும் தனது முடிவை பிரதமரிடம் தாம் தெரிவித்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அமைச்சரவை இன்றைய தினம் சந்திக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவித்தல் வெளியாகின்றது.

மெய்நிகர் வழியாக நடைபெற உள்ள இந்த அமைச்சரவை சந்திப்பில் ‘நியமனங்கள்’ குறித்து கலந்துரையாடபட உள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த சந்திப்பில் தொழிலாளர் அமைச்சர் பதவிக்கு புதிய ஒருவரை நியமிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது.

புதிய தொழிலாளர் அமைச்சர் வெள்ளிக்கிழமை பதவியேற்பார் என பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

சென்-ஜோன்ஸ் சௌத்-மவுன்ட் பேர்ல் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக 2015ஆம் ஆண்டு சீமஸ் ஓ’ரெகன் தெரிவானமையுடன், 2019, 2021 தேர்தல்களில் அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

படைவீரர் விவகாரங்கள், சுதேச சேவைகள், இயற்கை வளங்கள், தொழிலாளர், முதியோர் விவகாரங்கள் உட்பட பல அமைச்சு பதவிகளைிவர்ச் வகித்துள்ளார் என்பதுடன், இவர் பிரதமர் ட்ரூடோவின் நீண்ட கால நெருங்கிய நண்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருள் குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடைய 19 பேரை பொலிஸார் கைது




**ஒன்ராரியோ, ஜூலை 19**

கனடாவில் பாரிய அளவிலான போதைப் பொருள் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 19 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹமில்டன் மற்றும் நயகரா பிராந்தியங்களில் இந்த நபர்கள் போதைப் பொருள் விநியோகத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்தி வழக்கு தொடர்வார்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் இந்த வலையமைப்பு தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொக்கேய்ன், போதை மாத்திரைகள், கிறிஸ்டல் மெத்தப்பெட்டமைன் உள்ளிட்ட பல்வேறு போதைப் பொருள்கள் இந்த நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சந்தேகநபர்களிடம் இருந்து ஆயுதங்கள், துப்பாக்கி ரவைகள், நாணயத்தாள்கள் உள்ளிட்ட பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் அடையாளம் காணப்படாத சந்தேகத்திற்கிடமான போதைப் பொருள் வகை ஒன்றும் இந்த நபர்களிடமிருந்து மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# கனடாவின் வெளிவிவகார அமைச்சர் இன்று சீனாவுக்குப் பயணமாகின்றார்

**ஒன்ராரியோ, ஜூலை 19**

கனடாவின் வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

சீன அரசின் அழைப்பின் பேரில் மெலானி ஜொலி இன்று சீனாவுக்குப் பயணமாகிறார்.

கனடிய வெளிவிவகார அமைச்சு இந்த பயணத்தை உறுதிப்படுத்தியுள்ளது.



இந்த பயணத்தில் சீனாவின் வெளியுறவு அமைச்சர் வெய் யீயுடன் உயர் மட்ட பேச்சுவார்த்தைகளை மெலானி ஜொலி முன்னெடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு அமைச்சர்களும் இரு நாட்டு உறவுகள் உள்ளிட்ட விடயங்களை விவாதிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக கனடிய வெளிவிவகார அமைச்சின் அறிக்கை குறிப்பிடுகிறது.

இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் இடையிலான பதற்றங்களுக்கு மத்தியில் இந்தப் பயணம் நிகழ்கிறது.

# காலநிலை மாற்ற நெருக்கடிகளை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு

**ஒன்ராரியோ, ஜூலை 19**

காலநிலை மாற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் டொரன்டோ பெரும்பாக பகுதியில் பாரிய மழை வெள்ளம் ஏற்பட்டது.

இந்த சீரற்ற காலநிலை அழுத்தமானது காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தை வீரியத்துடன் மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மழை மற்றும் பலத்த காற்று போன்ற காரணிகளினால் டொரன்டோ மக்கள் பாதிக்கப்பட்டு இருந்தனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் மின்சார வசதியின்றி அவதியுற நேரிட்டது.

சீரற்ற காலநிலையின் போது நகர பணியாளர்கள், மின்சார பணியாளர்கள் மற்றும் பல்வேறு வகைகளிலும் உதவியவர்கள் அனைவருக்கும் பாராட்டு தெரி



விக்கின்றார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வெள்ள அனர்த்தம் குறிப்பிடத்தக்க ஓர் நிகழ்வு என அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

காலநிலை மாற்றத்திற்கு எதிராக அனைவரும் இணைந்து செயல்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் அடிக்கடி இவ்வாறான காலநிலை அனர்த்தங்களை சந்திக்க நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையிலான உட்கட்டமைப்பு வசதிகளில் கூடுதல் முதலீடு செய்யப்பட வேண்டும் எனவும் கனடிய பிரதமர் தெரிவித்துள்ளார்